**செய்தி வெளியீடு எண் : 2119** **நாள் : 21.10.2023**

**செய்தி வெளியீடு**

**“இந்தியாவில் சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்டிட, சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திட, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரியான கணக்கெடுப்பினை இணைத்து நடத்திட வேண்டும்” – என வலியுறுத்தி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம்**

இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்டி, வளர்ச்சியின் பலன்களை மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்குக் கொண்டு செல்வதற்கும், வலிமையான, அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவை உருவாக்குவதற்கும் ஏதுவாக, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன், விரிவானதொரு சாதிவாரிக் கணக்கெடுப்பை இணைத்து நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய அரசு உடனடியாகத் தொடங்கிட வேண்டுமென்று வலியுறுத்தி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறாத நிலையில், வரவிருக்கக்கூடிய தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பில், சாதிவாரியான கணக்கெடுப்பினை இணைத்து நடத்திட வேண்டுமென்று தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநில அளவில் இதற்கான நல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும், இந்தியாவின் சட்டப்பூர்வ மக்கள்தொகை கணக்கெடுப்பு, முக்கியமான சாதி தொடர்பான தரவு உள்ளீடுகளுடன் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே, சமூக நீதி, சமத்துவம் போன்றவற்றை நிலைநாட்டிட இயலும் என்றும், சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திட இயலும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

\- - - - - -

**Text of the D.O. Letter dated 20-10-2023 of Hon’ble Chief Minister of Tamil Nadu Thiru. M.K. Stalin addressed to the Hon’ble Prime Minister of India Thiru. Narendra Modi, requesting to integrate caste census with the upcoming national decadal census:**

I wish to bring to your kind attention the need for the Union Government to immediately plan and commence the preparations for conducting a comprehensive caste census in India. Considering the fact that the previous census due in 2021 could not be conducted and the crucial caste related data outcomes would touch the lives of crores of deserving people in our country, it should not be delayed any further.

Census data has always provided the bedrock for framing policies and targeting specific interventions for the socio-economic development of the underprivileged. Since caste has historically been a key determinant of the prospects of social progress in our society, it is essential that factual data on it is made available in public domain. Only this can empower various stakeholders and policymakers to analyze the impact of our past programs and plan the strategies for the future. However, no contemporary data is available since the last caste census was conducted in India only in 1931.

In the last 90 years, the demographic and socio-economic landscape of our country has undergone many changes. But the underprivileged sections of our society continue to remain backward, in spite of numerous past policy actions. Hence, it is vital that contemporary data derived from a common standard process at the national level is cumulated to address all the pressing issues related to social justice, equity and inclusivity.

Some State Governments like Bihar have made good attempts in this direction by successfully conducting a caste-based surveys and some have announced such steps. Although these state specific initiatives and their data outcomes are very useful in providing insights into our society and its needs, they lack the advantage of a nationwide comparability of inputs and processes. In addition, they lack the statutory stamp without a legislative backing for such data collection since census as a subject is in Union list. Hence, we are of the considered view that only a statutory Census of India, with critical caste related data inputs, would be able to provide an appropriate platform for upholding social justice.

In the light of the above, integrating the caste census with the proposed national decadal census alone can provide comprehensive and reliable data on the caste composition of our society and its reflection on the socio-economic indicators. This will enable evidence-based policymaking, helping all of us to ensure an equitable and inclusive development. Undertaking this task concurrently with the decadal census would not only ensure comparability of data across the nation but also optimize resource utilization.

Hence, I earnestly request you to integrate caste census with the upcoming national decadal census. I have no doubt that this initiative will be a monumental step to take the benefits of development to the most vulnerable sections and build a stronger, more inclusive India. I look forward to your personal intervention in this regard.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in